# கீர்த்தனையின் மகிமை

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு 1706-ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு லுத்தரன் சபையை சேர்ந்த 23 வயது பார்த்தலேமேயூசீகன்பால் அவர்களும் ஹென்றி புளுசோவும் முதல் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகளாக டென்மார்க் மன்னன் நான்காம்பிரடெரிக்கால் இந்தியாவுக்கு கப்பலில் அனுப்பப்பட்டு தஞ்சாவூர்க்கு கிழக்கே உள்ள தரங்கம்பாடியில் காலடி எடுத்துவைத்தனர். அதன்பின்பு ஐரோப்பியர்களின் SPCK, SPG சங்கங்கள் மற்றும் அமெரிக்கன் மிஷன், CMS போன்ற இயக்கங்களால் தமிழகத்தில் சீர்திருத்தத்திருச்சபைகள் பல்வேறு பகுதிகளில் வேருன்றி வளர்ந்து வந்தன. இந்த காலத்தில் கிறிஸ்தவ மத வழிபாட்டிற்கு பாடல்கள் இன்றியமையாத தேவையாய் அமைந்திருந்தன.

பாடல்கள் கவிஞர்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுத்து வருகின்றன. கவிதைகள் நெஞ்சின் ஓலிகள், உள்ளத்தின் உணர்வுகளுக்கு ஒரு வடிகால், காலத்தால் அழிக்க முடியாததாய் காகிதத்தில் பதிக்கப்படும் படிமங்கள். பதிப்போரையும் படிப்போரையும் இணைத்திடும் உணர்ச்சிப்பாலம்.

கவிதை என்றால் கற்பனை என்ற எண்ணம் பொய்த்துப் போகிறது. கவிதைகள் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒன்றியவைகள். ஒவ்வொரு கவிதைக்கு பின்னால் ஒரு உண்மைச் சம்பவம் மறைந்து கொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால் கவிஞர்கள் தங்கள் அனுபவங்களையே கவிதை வடிவில் தருகிறார்கள். கவிஞன் மனித வாழ்வோடு ஒன்றுபட்டவன். அவன் கண்டு, கேட்டு, ரசித்து அனுபவித்த உணர்ச்சிகளையே கவிதையில் வடித்து தருகிறான். நிகழ்வுகளை நினைவுபடுத்தும் ஒரு சில வார்த்தைகள் தான் கவிதை வடிவம். தரமான கவிதைகள் சாகாவரம் பெற்றவைகள். கவிதை சுவையானது! சுகமானது!!.

கவிதையின் தனிச்சிறப்பு தாளமும் சந்தமும் நிறைந்திருப்பது தான். தமிழ் இலக்கணம் தாளங்களை வைத்தே வரையறுக்கப்பட்டுள்ளது. ஓசையை அடியாகக் கொண்டே எதுகையும், மோனையும் தோன்றியுள்ளன. அதனால் கவிதைகள் இசையோடும் தாளத்தோடும் இணைந்து பாடல்களாய்ப் பாடப்படும் போது மனித இதயங்களை மெய்மறக்கச் செய்கின்றன. ஆலயங்களிலும், ஜெபக்கூட்டங்களிலும், பாடல்களால் தேவனைப் போற்றி புகழ்வதும், அவரிடம் மன்றாடுவது, அவருடைய பிறப்பை, இறப்பை, உயிர்த்தெழுதலை பாடல்களால் நினைவு கூறுவதும் ஒரு முக்கியப் பகுதியாய் அமைந்திருந்தது.

இன்று அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் கிறிஸ்தவ வழிபாட்டிற்கும் பாடல்கள் முக்கியமானதாய் அமைந்து விட்டன. இவற்றில் கிறிஸ்தவ கீர்த்தனைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்போது பழைய கீர்த்தனைகள் ஆலயங்களில் பாடுவது குறைவு பட்டு வருவதாலும், கீர்த்தனைகளின் பொருள் உணர்ந்து ஆலயங்களில் பாடி பயன்படுத்தப்படாத கீர்த்தனைகளையும் பாடி தேவனை மகிமைப்படுத்துவதுமே, அமரர் திரு.பா.தங்கசாமி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த கீர்த்தனையின் மகிமை அறக்கட்டளையின் நோக்கம்.

கடந்த 8 ஆண்டுகள் முடிவடைந்து விட்ட நிலையில் சென்ற இரண்டு ஆண்டுகள் தலைவராக இருந்த திரு.ஏ.ஜெபஸ் நற்குணம் அவர்களை நினைவு கூற கடமைப்பட்டு இருக்கிறேன். அவருக்கு பாட்டு என்றால் மிகவும் விரும்புவார். எப்போதும் நன்றாக பாடிக்கொண்டே சந்தோஷமாக இருப்பார். கீர்த்தனை பாடல்களை அடிக்கடி பாடுவார். கார் ஓட்டும் போதும், சோர்வாக இருக்கும் போதும் பாடிக்கொண்டே மற்றவர்களை தன் பாட்டினால் கவரும் தன்மையுள்ளவர். அப்படிப்பட்ட நல்ல தலைவரை இழந்தது எங்கள் அறக்கட்டளைக்கும், கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் ஒரு பெரிய இழப்பாகும். அவர் குடும்பத்திற்காக நாம் ஜெபிப்போமாக.

இந்த 9-ஆம் ஆண்டு கீர்த்தனை பெருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஆற்றலும் அன்பு உள்ளம் கொண்ட ஒரு இளம் தலைவர். திரு.பி.கிறிஸ்டோபர் கருணாகரன் நமக்கு கிடைத்து இருக்கிறார். அவரின் கீழ் இனி வரும் விழாக்களையும், உபதலைவர் டாக்டர். ஜாஸ்மின் குணசிங், செயலாளர் திரு.W.S.J.தம்புதுரை, பொருளாளர் திரு.சுசீலா வில்லியம்ஸ் மற்றும் எல்லா அறக்கட்டளை உறுப்பினரோடும் சேர்ந்து வளர்க்க தேவன் கிருபை செய்வார்.

இந்த வருடம் அநேக புதிய ஆலயங்களில் குழுவாக வந்து பாட இசைந்த எல்லா பாடக குழுக்களையும் பாராட்டுகின்றன. இடைப்பட்ட நாட்களில் இவ்விதமான ஒரு விழாவை நீலகிரி வட்டகையில் நடந்த தேவன் கிருபை செய்வாராக. இவ்விதமான ஊழியங்கள் ஆயர்களின் உதவி இல்லாமல் நடத்திட இயலாத காரியம். ஆகவே கோவை பேராயத்தில் உள்ள எல்லா ஆயர்களையும் அணுகி, அவர்களின் உதவியோடும் பேராயரின் நல்லாசியுடனும் இந்த ஊழியம் சிறப்புற நடக்க தேவன் கிருபை செய்வாராக.

இந்த விழாவை மகிழ்விக்க வருகைதர இசைந்துள்ள நமது பேராயர், Rt.Rev. திமோத்தி ரவீந்திரர் ஐயா, திரு.டேவிட்சன் ஆசீர் IPS ஐயா மற்றும் வேலூர் பேராயத்தின் முன்னாள் பேராயர் Rt.

Rev.Dr.Y.வில்லியம்ஸ் ஐயா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**C.ஜான்சன்**
அறக்கட்டளை உறுப்பினர்
மற்றும் விழா இயக்குனா